# நவீனத்தின் நிறம்

1907-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் உரோமையில் பாப்பரசரின் ஆட்சிமன்றம் (Roman Curia) மிகுந்த பரபரப்புடன் காணப்பட்டது. விரைவில் வந்துவிடும் என்று எதிர்பார்த்த "நவீனர்களுக்கு எதிரான சுற்றுமடல்" பற்றிய வதந்தியே அதற்குக் காரணம்! அதில் யார் யார் குறிப்பிடப்படுவார்களோ? அதனால் வரப்போகும் விளைவுகள் எவையோ? என்னென்ன மாற்றங்கள் நிகழப்போகின்றனவோ? என்ற கேள்விகளால் ஆட்சி மன்ற தந்தையர்களிடையே ஒருவிதமான எதிர்பார்ப்பு தோன்றியது! ஏனெனில் சில மாதங்களுக்கு முன்புதான், அதாவது 1907, ஜூலை 3-ம் தேதி "Lamentabili Sane Exitu" வெளிவந்த - தப்பறைகளின் தொகுப்பு" என்ற பாப்பரசரின் தன்னிச்சை மடலின் சாரம் அப்படிப்பட்டது. ஆம்! அதில் திருச்சபையில் தவறாகப் போதிக்கப்பட்டு வந்த தப்பறைகள் கண்டிக்கப்பட்டிருந்தன. (அம்மடலில் 64 கண்டிக்கப்பட்ட போதனைகளின் தொகுப்பு வெளியிடப்பட்டது. 1-24 வரை வேதாகமத்தைக் குறித்தவை: 25-26 விசுவாசத்தின் தன்மை குறித்தவை: 27-38 நமதாண்டவர் சம்பந்தமானவை: 39-52 தேவதிரவிய அநுமானத்தைக் குறித்தவை: 52-64 வரையிலான போதனைகள் திருச்சபையின் செயல்பாடு மற்றும் அமைப்புக் குறித்தவை.

இந்த தன்னிச்சை மடலின் தாக்கம் பெரியதாக இருந்தது. அதன் விளக்கவுரையான பாப்புவின் சுற்றுமடல் வரவிருக்கிறது என்ற எண்ணமே நவீனர்களை கலக்கியது. ஏனெனில் அப்போதைய பாப்பரசரின் குணம் அப்படிப்பட்டது! நவீனத்திற்கு எதிரான தீர்க்கமான எண்ணம் கொண்டவர். அதே சமயம் அர்ச்சிஷ்டவர் என்ற மனப்பான்மை திருச்சபையின் அதிகாரிகளின் மத்தியில் நிலவி வந்திருந்தது. யார் அந்த பாப்பானவர்? அவரே அர்ச். பத்தாம் பத்திநாதர்! "நவீனத்திற்கு சம்மட்டி" என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்ட அவர் தாம் அறிவித்தது போலவே 1907, செப்டம்பர் 8-ம் நாளன்று "Pascendi Dominic Gregis " என்ற சுற்றுமடலை வெளியிட்டார். உரோமை பாப்புவின் ஆட்சிமன்றத்தினரின் எதிர்ப்பார்ப்பைப் போலவே அது நவீனர்களுக்கு பேரிடியாக

வந்து இறங்கியது! திருச்சபையின் அன்பர்களுக்கு இன்ப அதிர்ச்சியாக விளங்கியது!

பாப்பரசர் வெளியிட்ட வரலாற்று சிறப்பு மிக்க அந்த சுற்றுமடல் அக்காலக்கட்டத்தில் மிக நீளமானதாகக் கருதப்பட்டது. (2-ம் அருள் சின்னப்பரின் குருத்துவத்தைப் பற்றிய Pastores Dabo Vobis - இதனைவிட இரண்டரை மடங்கு நீளமானதாகவும், நெடுந்தொடர்களைக் கொண்டதாகவும் உள்ளது. ஆர்.)

பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர் எதிரிகளின் கைகளிலிருந்து திருச்சபையைக் காப்பாற்ற இந்த சுற்று மடலை எழுதினார். இதனை எழுத அவருக்கு கர்தினால் Billot. அதிமேற்றிராணியார் Umberto Benigni மற்றும் சங். Lemius என்ற தலைசிறந்த வேத அறிஞர்கள் உதவினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே குறிப்பிட்டது போல இம்மடல் திருச்சபையை அழிப்பதற்காக உருவான "நவீனம்" என்ற தப்பறையை எதிர்த்துப் போராடவும், விசுவாசிகளுக்கு அதன் உண்மையான நிறத்தை உரித்துக்காட்ட வேண்டும் என்ற நோக்குடன் இயற்றப்பட்ட இவ்வருமையான 'இலக்கியம்' உண்மையில் ஒரு இமாலய சாதனையாகும். எங்கும் பரந்து வியாபித்துக் கிடந்த நவீனர்களின் கருத்துச் சிதறல்களை ஒன்றுக்கூட்டி, அதன் கொடூரத்தை இனம் காட்டிய இப்பெரும் முயற்சியினைக் கண்டு வியந்தவர்களில் நவீனர்களும் உண்டு. தங்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைக்கும் இந்த நிருபத்தை இவர்கள் வெறுத்தாலும்… தங்களது (நவீனர்களின்) குற்றங்களை வெகு நேர்த்தியாய் கண்டுபிடித்த பாப்பரசரின் சாதுரியத்தைக் கண்டு வியந்தனர்!

சுற்றுமடலின் நேர்த்தி

பாப்பரசர் அர்ச். 10-ம் பத்திநாதருடைய இந்த மடலின் அழகை, அதன் நேர்த்தியை, நவீனத்தை அது சாடி தோலுரிக்கும் சாமர்த்தியத்தை சில எடுத்துக்காட்டுகள் மூலம் நாம் காண்போம்.

பாப்பரசர் தன்னுடைய மேய்ப்பின் கீழ் ஒப்படைக்கப்பட்ட நமதாண்டவரின் ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டிய விசேஷக் கடமையால், அவற்றின் (எதிரிகளின்) தந்திரங்களைக் கடுமையாகக் கண்டிக்கிறார். இத்தகையோர்களைப் பற்றிக் கூறும் போது, "..தங்களை

திருச்சபையின் சீர்திருத்தவாதிகள் என்று எவ்விதமான தன்னடக்கமுமின்றி பறைசாற்றுபவர்கள் உண்மையிலே திருச்சபையின் அழிவுக்கு வழிவகுப்பவர்களே.." என்று சாடுகிறார். நவீனத்தை, "இது புதுவித தப்பறை - நவீனர்களின் இயக்கம்" என்றெல்லாம் தெளிவாகக் குறித்துக் காட்டுகிறார்.

நவீனம் மற்ற தப்பறைகளைப் போலன்று: மற்ற தப்பறைகள் வாசித்ததும் கண்களுக்குப் புலப்படக்கூடியவை. ஆனால் நவீனம் அப்படியல்ல… முதல் பார்வைக்கு கத்தோலிக்க நிறம் காட்டி, அதையே கூர்ந்து ஆய்வு செய்தால் மற்றொரு நிறம் (பொருள் தரும்) காட்டும் வித்தியாசமான தன்மை கொண்டது. அதனுடைய நச்சுத்தன்மையைக் குறித்து பாப்பரசர்: "**...இதைவிட திறமையான முறையை யாரும் கையாள முடியாது. இவர்களை விட தந்திரசாலிகள் யாரும் இருக்க முடியாது, ஆயிரக்கணக்கான தந்திர வேலைகளைச் செய்வதில் இவர்கள் வல்லவர்கள். ஏனெனில் ஒரே சமயத்தில் இவர்கள் கத்தோலிக்கர்களாகவும், பகுத்தறிவாளர்களாகவும் தங்களைக் காட்டிக் கொள்ளக்கூடியவர்கள். இப்படித்தான் சற்று கவனமில்லாத ஆன்மாக்களை தப்பறைக்கு இழுத்துச் செல்கிறார்கள்...**" (எண்.3) என்று குறிப்பிட்டு நவீனர்களின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்துகிறார்.

## நவீனம் ஒரு புதுவித தப்பறை

பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர் தமது மடலில் நவீனத்தை இதுவரை இல்லாத புதுவித தப்பறை (New Heresy) என்று அழைக்கிறார். அதன் செயல்பாட்டை விளக்க இரண்டு ஒப்புவமைகளை (Analogies) தருகிறார். இவைகளின் மூலம் நவீனர்களின் தந்திரமான செயல்பாட்டை விவரிக்கிறார்.

**முதல் ஒப்புவமை - பாதாள சாக்கடை :**

அது நம் கண்களுக்குப் புலப்படாது. பூமிக்கு அடியிலே சென்று கொண்டிருக்கும். அதன் போக்கு, அதன் தரம் சாதாரண மக்களுக்குத் தெரியாது. ஆனால் அவை, அதில் இறங்கி வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு மட்டுமே தெரியக்கூடியதாக இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், அது மற்ற எல்லா கழிவு நீரும் வந்து கலக்கும் இடமாகவும் இருக்கிறது. அதுபோல நவீனம் எல்லா தப்பறைகளையும் தன்னகத்தே கொண்டதாக விளங்குகிறது.

இதற்காகத்தான் அர்ச். பாப்பானவர் அதனை (நவீனத்தை) “எல்லா தப்பறைகளின் தொகுப்பு” (Synthesis of all heresies) என்று அழைக்கிறார்.

**இரண்டாவது ஒப்புவமை - பச்சோந்தி :**

இது தான் இருக்கும் சூழ்நிலைக்கேற்ப தன் நிறத்தை மாற்றிக்கொள்ளக் கூடியது. இவ்வாறு வெள;வேறு நிறங்களில் தோன்றினாலும் அதன் தன்மை ஒன்றுதான். அதே போன்று நவீனரும் பல நிறங்களில் (வகைகளில்) தோன்றினாலும் அதன் தன்மை ஒன்றுதான்.

நவீனர்கள் தாங்கள் கூறவந்ததை குழப்ப வார்த்தைகளால் கூறி, விசுவாசிகளைக் குழப்பச் செய்து, பின்னர் அவர்களது விசுவாசத்தை அழிக்கும் நச்சுத்தன்மை கொண்டவர்கள். இந்த நச்சுக்காற்று புகாத இடமேயில்லை. இதற்கு முன் இருந்த தப்பறைகள் ஏதாவது ஒரு சில சத்தியங்களை மட்டுமே மறுதலிக்கக் கூடியதாய் இருக்கும். ஆனால் நவீனமோ அனைத்துச் சத்தியங்களையும் ஒரே நேரத்தில் அழிக்கும் வல்லமை கொண்டது. மற்ற தப்பறைகளின் போராட்டம் (அதாவது, அது போதிக்கப்படும் விதம்) வெளியரங்கமாக இருக்கும். ஆனால் நவீனமோ உள்ளரங்கமாய், மறைந்திருந்து (அதாவது, சத்தியமே போதிக்கப்படுகிறது என்ற உணர்வை தந்து அசத்தியம் போதிக்கப்படும் தந்திரம்) தாக்க வல்லது.

**“...திருச்சபையின் சீர்திருத்தவாதிகள் என்று தங்களை அழைத்துக் கொள்ளும் இவர்கள் உண்மையில் அழிவையே செய்து கொண்டிருக்கிறார்கள்**...” - அர்ச். பத்தாம் பத்திநாதர்.

இப்படி காலத்துக்குத் தக்கபடி நவீனர்கள் தங்களது நிறங்களை மாற்றிக் கொண்டதனால்தான் அர்ச். பத்தாம் பத்திநாதரின் முயற்சிகள் முழு பலன் அளிக்கவில்லை. அது திருச்சபையின் பிரமாணிக்கமுள்ள அதிகாரிகளின் கண்களுக்குத் தப்பி தலைமறைவாகி பின்னர், கனிந்த நிலையில் 2-ம் வத்திக்கான் சங்கத்தில் தனது தலையைக் காட்டியது! சங்கத்தில் தனக்குக் கிடைத்த சாதகமான அனுதாப அலையை கண்டு மீண்டும் வெளிவந்து, தன் நிறத்தை வெளிப்படுத்தியது. அது எந்த அளவிற்கென்றால், சங்கம்

முழுவதையும் தமது கொடிய அக்டோபஸ் கைகளால் பிடித்துக் கொண்டு, தனது தாக்குதல்களைத் தொடங்கியது.

## நவீனர்களின் தந்திரம்

பாப்பரசர் அர்ச். பத்தாம் பத்திநாதர் தமது Pascendi சுற்றுமடலில், "...நவீனர்களின் செயல்பாடுகள் பற்றி விளக்கும்போது நவீனர்கள் தந்திரக்காரர்கள். எந்த ஒரு கோட்பாட்டையோ, கொள்கையையோ அவர்கள் வழங்கும் போது அதில் ஒழுங்குமுறை அமைப்போ, ஒருமைப்பாடோ இல்லாதவாறு வழங்குவார்கள். அப்படி வழங்கும் போது ஏதோ குழப்பத்தில் தாங்கள் இருப்பதாகக் காட்டிக்கொண்டாலும், உண்மையில் அவர்கள் திடமாகவும் (தங்களின் கொள்கைகளில்) தெளிவாகவும் இருக்கிறார்கள்" . மக்களை ஏமாற்ற இது ஒரு யுக்தி! இதற்கு உதாரணமாக 2-ம் வத்திக்கான் சங்கத்தின் 16 ஏடுகளையும் கூறலாம். அவை பார்ப்பதற்கு தெளிவில்லாமலும், மனம் எழுப்பும் கேள்விகளுக்கு சரியான பதில் இல்லமலும் தோன்றும். ஆனால் இவ்வேடுகளின் அமைப்பு உண்மையில் ஒரு புதுவித கொள்கையை, போதனைகளை மக்களுக்கு (விசுவாசிகளுக்கு) தர வேண்டும் என்ற எண்ணத்தில் அலங்காரமாக எழுதப்பட்டது. இப்படித்தான் திருச்சபை என்பது என்ன என்பதற்கான புதிய இலக்கணத்தை (Definition) இவர்களால் தர முடிந்தது.

அது என்ன புதிய இலக்கணம்! திருச்சபை என்பது என்ன என்பதற்கு நமது விசுவாச மந்திரம் கூறுவதென்ன?

"திருச்சபை என்பது உரோமை மேற்றிராணியாரான பாப்பரசரின் தலைமை அதிகாரத்தை ஏற்று, பணிந்து, ஒரே விசுவாசத்தை அறிக்கையிடும் ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகளைக் கொண்ட சுபாவத்துக்கு மேலான, காணக்கூடிய சபை" என்று முத். 9-ம் பத்திநாதர் பாப்பரசர் இலக்கணம் தந்துள்ளார். இதனையே சாதாரண ஞானோபதேச புத்தகங்களில் காண்கிறோம்.

ஆனால் நவீனர்களால் ஆட்கொள்ளப்பட்ட 2-ம் வத்திக்கான் சங்க போதனை என்ன கூறுகிறது என்பதைப் பார்ப்போம். "Lumen Gentium - மக்களின் ஒளி" என்ற அழைக்கப்படும் திருச்சபை பற்றிய கோட்பாட்டின் விளக்க ஏடு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த ஏட்டில் திருச்சபையின்

இலக்கண வரையறை மாற்றப்பட்டுள்ளது. இந்த ஏடு 1964, நவம்பர் 21-ம் நாள் பாப்பு 6-ம் சின்னப்பரால் பிரகடனப்படுத்தப்பட்டது!

## சங்கம் தரும் இலக்கணம்

**“கிறீஸ்துவில் திருச்சபை ஓர் அருளடையாளம் போல் விளங்குகிறது. அதாவது இறைவனோடு உள்ள நெருங்கிய ஒன்றிப்பிற்கும் மனிதகுலம் முழுவதன் ஒற்றுமைக்குமான அடையாளமும் கருவியுமாய் உள்ளது.”** - Lumen Gentium முதல் இயல், முதல் பத்தி – (சங்க ஏடுகள், IV - வது வெளியீடு, திருச்சி 2001 காண்க.)

இந்த ஏட்டின் நோக்கம் குறித்து எந்தப் பிரச்சினையும் இல்லை. தொடக்கத்திலேயே அதாவது தலைப்பிலேயே அது வழங்கப்பட்டிருக்கிறது. அது திருச்சபை பற்றிய கோட்பாடு விளக்கம்! திருச்சபையின் தன்மையை, அதன் இலக்கணத்தை வரையறைப்படுத்துவது என்பதே நோக்கம். ஆனால் திருச்சபையைப் பற்றிக் குறிப்பிடும்போது, **“...போல் விளங்குகிறது”** என்ற சொல் திறம் (expression) சேர்க்கப்பட்டுள்ளது.

ஒரு பொருளை வரையறுக்கும் போது அப்பொருளின் தன்மையை மட்டுமே தர வேண்டுமே தவிர அதன் ஒப்புவமைகளை (similitudes) தரக்கூடாது. அப்படி இல்லையென்றால் அதன் கருத்து பிழையின்றி துல்லியமாக இருக்க முடியாது. அதுமட்டுமல்ல, ‘அருளடையாளம்’ என்றால் என்னவென்றோ, திருச்சபைக்கும் அருளடையாளத்திற்கும் உள்ள இணை ஒப்புதல் என்னவென்றோ எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. இந்த இலக்கணம் எதிலிருந்து எடுக்கப்பட்டது, பாரம்பரியத்தில் இப்படிப்பட்ட முறையில் குறிப்பிடப்பட்டு உள்ளதா? என்று நிரூபிக்கப்படவில்லை. இவை புதியதாய் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் ஏற்கனவே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சத்தியம் போல் பின்வரும் மற்ற சத்தியங்களுக்கு படிகமாக இருக்கிறது.

இதனை எழுதியவர் சரியாக சிந்திக்காததால் கருத்து துல்லியமாக வரவில்லையா? அல்லது இப்படித்தான் வர வேண்டும் என்று அவர் விரும்பினாரா? சங்க ஏடுகளில் இப்படித்தான் ஒவ்வொன்றிலும்

தெளிவில்லாமல் சொற்கள் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் வரக்கூடிய கேடுகள் எத்தனை? அதுமட்டுமா?

அதே “Lumen Gentium - மக்களின் ஒளி” என்ற முதல் இயல், 2-வது பத்தியில், “...என்றும் வாழும் தந்தையாகிய கடவுள் அனைத்துலகத் திருச்சபையில் தந்தையோடு ஒருங்கு கூட்டப்பெறுவர்” இந்த 2-வது பத்தியில் சர்வேசுரனின் திட்டம் பற்றியும், அதன் செயலாக்கமும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதில் முதல் பிரிவில் “இரட்சண்யம்” என்ற கருத்து தவிர்க்கப்பட்டு முன் நியமனம் (Predestination) என்ற கருத்து புகுத்தப்பட்டுள்ளது. இரட்சண்யம் தேவையில்லை என்று நவீனர்கள் நினைத்துவிட்டனரா? இதன் இரண்டாவது பிரிவு மிக முக்கியமான ஒன்று. எப்படியெனில், சர்வேசுரனின் திட்டம் ஆன்ம இரட்சண்யமே. அதன் செயலாக்கத்தின் விளைவுதான் ஞானஸ்நானம் போன்ற தேவ திரவிய அநுமானங்களும், அவற்றை நிறைவேற்றும் அப்போஸ்தலிக்க படிநிலையினரான (Hierarchy) - குருக்கள். ஆனால் அவைகளைப் பற்றிய வார்த்தைகள் காணப்படவில்லை. இவ்வாறு வார்த்தைகளை மறந்தது மறுப்பதற்காகவா?

அதே போன்று மற்றப் பத்திகளிலும் (எண் 3 முதல் 7 வரை) திருச்சபையைப் பற்றிக் கூறும்போது எந்தவிதமான காணக்கூடிய அடையாளங்களும் இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் அர்ச். பத்தாம் பத்திநாதர் கூறுவது போல் திருச்சபை “புலன்களுக்குப் புலப்படும் சமுதாயம்” என்ற கத்தோலிக்கக் கோட்பாட்டினை நவீனர்கள் மறுக்கிறார்கள் - அக்கோட்பாட்டினை இருட்டடிப்பு செய்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறதல்லவா? எவ்வித வெளி அடையாளங்களும் இல்லாமல் இருப்பது. சற்று கவனமின்றி இருப்பவர்களின் விசுவாச வீழ்ச்சிக்கு அல்லவா வழிவகுக்கும். இப்படி நிறம் மாறி இருப்பதால் அவர்களை அடையாளம் காண்பதும் கடினமான காரியம்.

இதுபோன்று 8-வது பத்தியில்:

**“...இவ்வுலகில் ஒரு சமூகமாக நிறுவப்பெற்றதும், ஒழுங்கு முறையில் அமைந்ததுமான இந்தத் திருச்சபை பேதுரு வழி வருபவராலும், அவரோடு**

**ஒன்றித்திருக்கும் ஆயர்களாலும் வழிநடத்தப்படும் கத்தோலிக்க திருச்சபையில் உள்ளது”** (Subsist in Ecclesia Catholica)

இந்த பத்தயில் திருச்சபை பற்றிய கருத்துக்கள் மேலோட்டமாகப் படிக்கும்போது சிறந்தவையாகத் தோன்றினாலும், ஆங்காங்கே புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளைப் போல அங்கொன்றும் இங்கொன்றுமாக மாற்றுக் கருத்துக்கள் தூவப்பட்டிருப்பதை மேலே கூறப்பட்ட பகுதியை சற்று நிதானமாகப் படித்தால் அறியலாம்.

அது எப்படியெனில், இதுவரை போதிக்கப்பட்ட பாரம்பரிய கத்தோலிக்கப் போதனை: கிறீஸ்துவின் திருச்சபை கத்தோலிக்கத் திருச்சபையாக இருக்கிறது. அவற்றின் நடுவே, எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. ஒன்றைக் குறிப்பிடுவது மற்றொன்றையும் குறிப்பிடுவதாகும். அதற்காகத்தான் இவற்றை எப்போதுமே ஒருமைப்படுத்தியயே திருச்சபை பேசி வந்தது. (Ecclesia Christ est Ecclesia Catholica).

ஆனால் பத்தி 8-வதில் குறிப்பிடப்படும் (மேலே உள்ள) இப்போதனையில் இந்த விசுவாசம் மாற்றப்பட்டுள்ளது. இது வெறும் வார்த்தை மாற்றம் மட்டுமல்ல: மாறாக மெய்யுணர்வுக் கோட்பாட்டுச் சிக்கலாகவும் உள்ளது (Metaphysical problem) ஆகும். அதாவது அப்பொருளின் தன்மை மாறக்கூடிய ஆபத்து! அதுமட்டுமன்றி, அதில் அறிவு குறை சிக்கலும் அடங்கியுள்ளது. இதனால் அதனை அறியும் முறையும் மாறியுள்ளது. தன்மை மாற்றப்பட்டால் அதன் அர்த்தமும் மாறுபடுவது இயல்புதானே? ஒரே வார்த்தையில், அதுவும் எளிதில் புலப்படாத - அகப்படாத வார்த்தைகளைக் கொண்டு 2000 ஆண்டுகால திருச்சபையின் இலக்கணத்தையே மாற்றிவிட்டனர் இந்த நவீனர்கள்!

இம்மாற்றம் குறித்து மற்றொரு முறை தீவிரமான ஆய்வு செய்யலாம். ஆனால் இதனை சில நவீன அதிகாரிகள் எதிர்க்கின்றனர். மேலே 8-வது பத்தியில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இதுவரை போதிக்கப்பட்டு வந்த திருச்சபையின் கோட்பாடுகள் என்றும், அதனை சிறிது அழகுபடுத்த - மக்கள் விரும்பிய வகையில் கொடுப்பதற்காகத்தான் இந்த மாற்றம் என்று கூறி வருகின்றனர்.

ஆனால் இது உண்மையில்லை. மேலே குறிப்பிட்டுள்ள 8-வது பத்தியின் வரிகளைத் தொடர்ந்துவரும் வரிகளே நவீனர்கள் கூறுவது அனைத்தும் பொய் - வெளிவேடம் என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. அது:

**“…இதன் அமைப்பிற்கு (கத்.திருச்சபை) வெளியே தூய்மை நிலை, உண்மை ஆகியவற்றின் கூறுகள் பல காணப்பட்டாலும்…”**

அதாவது, கத்.திருச்சபைக்கு வெளியே திருச்சபையின் கூறுகள் காணப்படுகிறது. அதனால் கத்தோலிக்க திருச்சபையைச் சாராத (வெளியே உள்ள) மற்ற மதங்களிலும் இத்தகைய கூறுகள் இருக்கிறதாம்! எங்கோ போகிறது கதை! இதுவரை கத்.திருச்சபை ஒன்றே சத்திய வேதம், அதில் மட்டுமே சத்தியம் உள்ளது. மற்ற - பிற மதங்கள் பொய்யான மதங்கள் என்றும்: பரிசுத்தம் என்பது திருச்சபையின் நான்கு அடையாளங்களில் ஒன்று என்று விசுவசித்து வந்திருக்கிறோம். கத்.திருச்சபையும் இதனையே போதித்தும் வந்திருக்க, 2-ம் வத்திக்கான் சங்கத்தின் வழியாக உட்புகுந்த நவீனமான நச்சுப்புகை அதனை மாற்றிக் கூறி விசுவாசத்தை அழிக்கிறதே! ஆக, இது புது நூதனமான கொள்கை. சத்திய போதனை அல்ல என்றுதான் கொள்ளவேண்டும். அதுமட்டுமல்ல, சங்க ஏட்டின் எழுத்துக்களில் (எழுத்து பிழைகளை அல்ல) தொடக்கத்தில் தெளிவில்லாமல் தோன்றினாலும், பின்னர் வழங்கப்பட்ட தெளிவுரைகளிலும், அறிக்கையிலும் இந்த புதிய (தப்பறை) “விசுவாச கொள்கை” தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது.

ஆம்! அன்று அர்ச். பத்தாம் பத்திநாதரின் நடவடிக்கையால் தன்னை மறைத்து பதுங்கிக் கொண்ட நவீனம், 2-வது வத். சங்கத்தின் ஆதரவில் இன்று துணிச்சலுடன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது.

கத்தோலிக்க விசுவாசம் மீண்டும் மலர வேண்டுமானால், நவீனம் நிறுத்தப்பட்டால் மட்டும் போதாது, அது வீழ்த்தப்பட வேண்டும் - அழிக்கப்பட வேண்டும். நவீனம் நம்மைப் பீடிக்காமலிருக்க தேவையான கருவிகளையும் - உபாயங்களையும் அர்ச். பத்தாம் பத்திநாதரே அளித்துள்ளார். அவை:

**1. தாழ்ச்சி என்கிற புண்ணியம்.**

**2. எல்லாவற்றிற்கும் மேலாக சத்தியத்தை நேசித்தல்.**

**3. திருச்சபையின் மீதான பற்று - அன்பு.**

இவையே நம்மை நவீன நச்சுத்தன்மையிலிருந்து காப்பாற்றும்.

இறுதியாக, தற்போது திருச்சபையை ஆக்கிரமித்து, விசுவாசத்தை அழித்துக் கொண்டிருக்கும் நவீனத்திடமிருந்து அதனை காக்க வேண்டுமானால், நமது மிக. வந். ஃபெல்லே ஆண்டகை அவர்கள் கூறுவது போல மரியாயின் மாசற்ற இருதய வெற்றி துரிதமாக்கப்பட வேண்டும். அதற்கு பாத்திமாவில் தேவதாய் கேட்டுக்கொண்ட முதல் சனி பரிகாரப் பக்தி பிரமாணிக்கமுள்ள கத்தோலிக்க விசுவாசிகளால் அன்போடு அநுசரித்து வரவேண்டும். இதனால் மாதாவின் வெற்றிக்காக மோட்சம் விதித்துள்ள நிபந்தனைகளாகிய ரஷ்ய ஐக்கிய அர்ப்பணம் நமது பாப்பரசரால் செய்யப்பட வேண்டும். ஆம்! தேவதாய் மட்டுமே நம்மை - திருச்சபையைக் காப்பாற்ற முடியும்!